# மூவர் தமிழும் சைவ நெறியும்

894.81112
TIR
MUO

UNIVERSITY OF JAFFNA LIBRARY
AR/PR

பதிப்பாசிரியர்கள்

க. இரகுபரன்

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

ARCHIEVES

279367

279367

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

2014

University of Jaffna
Library
279367

நூலின் பெயர் :

மூவர் தமிழும் சைவ நெறியும்

பதிப்பாசிரியர்கள் :

க. இரகுபரன்

கலாநிதி. ஸ்ரீ. பிரசாந்தன்

முதற் பதிப்பு : 2014

வெளியீடு :

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

248, 1/1, காலி வீதி, கொழும்பு – 04,

இலங்கை.

அச்சு :

யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

48 B, புளுமெண்டால் வீதி, கொழும்பு – 13

தொ. பே. : 2330195

பக்கங்கள் : xxiv + 644

பிரதிகள் : 750

அளவு : 1/8

கடதாசி : 80 ஜி. எஸ். எம். வெள்ளைத்தாள்

விலை : ரூபா 800 /=

Title:

'Moovar Thamilum Saiva Neriyum'

Editors:

K. Raguparan

Dr. S. Pirasanthan

First Edition : 2014

Published by:

Dept. of Hindu Religious & Cultural Affairs

248, 1/1, Galle Road, Colombo - 04,

Sri Lanka.

Printers :

Unie Arts (Pvt) Ltd.,

48 B, Bloemendhal Road, Colombo 13.

Tel: 2330195

No of Pages : xxiv + 644

No of Copies : 750

Size : 1/ 8

Paper Used : 80 GSM White Paper

Price : Rs. 800 /=

ISBN 978-955-9233-33-6

# சம்பந்தர் பாடல்களில் மாயை

ச. முகுந்தன்

சைவசித்தாந்தம் என்பது மெய்கண்டசாத்திரங்களில் தொடங்கிப் பண்டாரசாத்திரங்களுடன் நிறைவுற்ற தத்துவக் கொள்கையன்று. தமிழ்நாட்டிற்கு மட்டுமே உரித்தான தனிப்பெரும் தத்துவமுமன்று. எவ்வாறாயினும் மெய்கண்ட சாத்திரங்களின் பிரகாரம் சைவசித்தாந்தக் கொள்கையைச் சாதிப்பதற்குரிய பிரமாண நூல்கள் என்கின்ற தகுதிப்பாட்டைத் திருமுறைகள் தம்மகத்தே கொண்டுள்ளன. திருஞானசம்பந்தரின் கிடைக்கப்பெற்றுள்ள 4158 தேவாரங்களும் அவற்றில் முதல் மூன்று திருமுறைகளாக இடம்பெற்றுள்ளன.

*"விளையாததோர் பரிசில்வரு பசு பாச வேதனை ஒண்*
*தளையாயின தவிரவ்வரு தலைவனது சார்பாம்"* [1]

எனத் திருஞானசம்பந்தரும் தன்னை முப்பொருள் உண்மையைச் சாதிக்கும் சைவசித்தாந்த தத்துவத் தளத்தில் காலூன்றியவராக வெளிப்படையாகவே இனங்காட்டிக் கொண்டுள்ளார்.

## முன்னோடி ஆய்வுகளும், ஆய்வின் நோக்கமும்

திருஞானசம்பந்தரின் பதிகங்கள் உள்ளிட்ட மூவர் தேவாரங்களில் சைவசித்தாந்த கருத்தியல் தொடர்பான பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன.

இரத்தினசபாபதியினுடைய திருமுறைகளில் சைவசித்தாந்த சிந்தனைகள், திருமுறைத் தெளிவே சிவஞான போதம், வெள்ளைவாரணனார் எழுதிய சைவசித்தாந்த சாத்திர வரலாறு,சிவகுருநாதபிள்ளையின் சம்பந்தர் ஆய்வடங்கல், ஜயலக்ஸ்மியின் *"Religion and Philosophy of Thevarams"* போன்றன இவற்றுட் சில.

இந்நூல்களில் சம்பந்தர் பாடல்களில் இழையோடியுள்ள மாயை பற்றிய கருத்துக்கள் வெளிப்படையாகப் பேசப்படவில்லை. மேலும் அ.ச.ஞானசம்பந்தனால் தொகுக்கப்பட்ட மூவர் தேவார திருப்பதிகங்கள் மற்றும், செங்கல்வராயபிள்ளையால் தொகுப்பாய்வு செய்யப்பட்ட தேவார ஒளிநெறி ஆகிய நூல்களில் மாயை என்ற வெற்றுச் சொல்லாடலைக் கூட அடையாளங்காண முடியாதுள்ளது. திருஞானசம்பந்தரின் 384 பதிகங்களிலுள்ள 4158 பாடல்களையும் ஒவ்வொன்றாகப் பரிசோதித்துப் பார்த்தபோது புத்திக்கெட்டிய வரையில் மாயை என்ற சொல்லாடல் இடம்பெறவில்லை.

ஆனால், சைவசித்தாந்தம் தொடர்பான பல கருத்தியல்களும், கலைச்சொற்களும் வெளிப்படையாகச் சம்பந்தரால் பதிவு செய்யப்பட்டிருந்தமையினை அவதானிக்க முடிந்தது. அவ்வாறாயின் மாயை தொடர்பாக வெளிப்படையான நிலைப்பாட்டினை சம்பந்தர் கொண்டிராமைக்கான காரணம் யாது? என்கிற ஆசங்கையே இந்த ஆய்வினை மேற்கொள்ளத் தூண்டியது எனலாம்.

இந்த ஆய்வுக்கட்டுரை உலகசம்பந்தம், பசுசம்பந்தம், பதிசம்பந்தம் என மூன்று தளங்களில் திருஞானசம்பந்தர் பாடல்களில் இழையோடியுள்ள மாயை பற்றிய கருத்துக்களை இனங்கண்டுகொள்ள முயல்கிறது.

## உலக சம்பந்தம்

பகுதிகளையுடையதும் சடத்துவமானதுமான பொருள் அறிவுடைய பொருளாகவும் அநாதியானதாகவும் ஆகிவிடாது. பௌதீகப் பிரபஞ்சம் இத்தகைய தன்மையுடையது. ஆகவேதான் உலகம் நிலைக்களமாவதற்கு உரிய மூலப்பொருளாக, உபதானமாக மாயையை சைவசித்தாந்தம் முன்மொழிகிறது.

*"என்னையிது எனில் உலகுக்குபதான மில்லை"* [2]

இறைவனை முன்னிலைப்படுத்தியே சைவசித்தாந்தச் சிந்தனைகள் பலவற்றை மொழிந்த சம்பந்தர் மாயை குறித்த விடயத்திலும் இதேபோக்கையே பின்பற்றியுள்ளார்.

மாயை என்ற பதம் சைவசித்தாந்த அடிப்படையில் ஒடுங்குதல், தோன்றுதல் அல்லது பிரபஞ்ச ஒடுக்கத்திற்கும், தோற்றத்திற்கும் காரணமாவது எனப் பொருள்படும். உலகமானது மாயையில் தோன்றி மாயாகாரியங்களாக நிலைபெற்று மாயையில் ஒடுங்குகிறது. இதனையே,

*"தோற்றமும் நிலையும் ஈறும் மாயையின் தொழிலதென்றே*
*சாற்றிடும் உலகம் என்ப"* [3]

என்கிறது சிவஞானசித்தியார்.

*"ஆதியாய் நடுவாய் அந்தமாய் நின்ற.....;"* [4]

என்கிறார் திருஞானசம்பந்தர். மேலும்,

*"விரிந்தனை குவிந்தனை விழுங்குயி ருமிழ்ந்தனை"* [5]

என்கிற தேவாரஅடியில் மாயையின் இச்செயற்பாட்டை இறைவனை முன்னிலைப்படுத்தி விவரிக்கிறார்.

இருபத்து நான்கு கரட் சுத்த தங்கம் செம்பைச் சேர்த்தபிறகே விரிக்கவும் வளைக்கவும் குவிக்கவும் ஏதுவாகும். அதுபோல சுத்தசைதன்ய வஸ்தாகிய

பதி தன்னியல்பிலே உலகாக விரிவதும் குவிவதும் தர்க்க முரண்பாடான விடயங்களாகும். ஆக இங்கே குறிப்பிடப்படும் விரிதல் குவித்தல் என்பன மாயையுடன் தொடர்புடைய விளக்கமேயாகும் என்பதனை இரண்டு நிலைகளில் வாதிடலாம்.

விரிந்தனை என்பது சுத்தமாயையிலிருந்து தோன்றும் காரியங்களைச் சுட்டும். இதனை, **"விருத்தி"** என்பதே சைவசித்தாந்த மரபாகும்.

"குவிந்தனை" என்பது பிரகிருதி மாயையிலிருந்து தோன்றும் சிருஷ்டியாகும். இதனை சமுதாயம்/ சமுச்சயம் என்பது சைவசித்தாந்த வழக்கு. சமுச்சயம் என்பதும் கூட்டம்/ குவிதலையே சுட்டுவது. ஆக முதலையும், முடிவையும் கூறியதிலிருந்து இடைப்பட்டதான அசுத்தமாயையின் சிருஷ்டியாகிய பரிணாமத்தையும் இவற்றுள் அடக்கினார் என்பது கூறாமலே விளங்கும்.

அடுத்த சொல் "விழுங்குயிர் உமிழ்ந்தனை" என்பதாகும். சைவசித்தாந்தக் கொள்கைப்படி உயிர்கள் அநாதியானவை; அழிக்கப்படவோ அல்லது விழுங்கப்படவோ, தோற்றுவிக்கப்படவோ அல்லது உமிழப்படவோ இயலாதவை.

முதற்காரணமாகிய மாயையினுள் ஒடுக்கப்பட்டிருந்த அல்லது விழுங்கப்பட்டிருந்த தனு, கரண, புவன போகங்களை சிருஷ்டியின் போது உமிழ்வதன் மூலமாக (தோற்றுவித்தல் அல்லது பரவச்செய்தல் மூலமாக) பல்வேறு யோனிபேதங்களில் தனு, கரண, புவன போகங்களை உயிர்கள் பெறுவதையே "விழுங்குயிர் உமிழ்ந்தனை" என்ற சொற்றொடர் குறித்து நிற்கிறதெனலாம். சித்தாந்த மரபுப்படி முட்டை, வித்து, வியர்வை, கருப்பை ஆகிய நான்கு ஊடகங்களில் 84 நூறாயிரம் யோனிபேதங்களில் உயிர்கள் உமிழப்படுகின்றன. இதனை,

*"ஏற்றியொரு தொகைதன்னில் இயம்புவார்கள் யோனி*
*எண்பத்து நான்கு நூறாயிரமென்றெடுத்தே"*[6]

எனச் சிவப்பிரகாசம் குறிப்பிடுகின்றது.

திருஞானசம்பந்தரும் இவ்விடயத்தை மிகத்தெளிவாக,

*"உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம்*
*நிரைசேரப் படைத்து............"* [7]

எனக் குறிப்பிடுவதும் சிந்திக்கற்பாலது.

**பசு சம்பந்தம்**

சுத்த, அசுத்த, பிரகிருதி மாயைகளிலிருந்து வெளிவரும் 36 தத்துவங்களும் அவற்றின் கூறுகளும் உயிர்களுக்கு ஏதோ ஒரு வகையில் அனுகூலந் தருவதற்காகவே வெளிப்படுத்தப்படுகின்றன.

சுத்தமாயையின் காரியங்கள் வைந்தவம் எனப்படுகின்றன. கேவலநிலையில் ஆன்மாக்கள் காரிட்ட ஆணவக்கருவறையில் செயலற்றிருந்தபோது அவற்றுக்கு சிற்றறிவுத் தூண்டலை வழங்கித் தன்னுணர்வு பெறவைத்து வினையாற்றும் வகையில் தூண்டுவது இவற்றின் கைங்காரியமேயாகும். இதனையே,

*"ஆதியாய் அந்த இருள் ஆகினர் தங்கள் வினை கோதியார்"* [8]

என்றும்

*"பசு பாச வேதனை யொண் தளையாயின"*
என்றும் சம்பந்தர் குறிப்பிடுவார்.

"ஒண்தளை" என்பதில் "ஒண்மை" என்பது புத்திக்கூர்மையைச் சுட்டும். ஆகவே உயிரைப் பற்றியுள்ள தளையேயானாலும் ஓரளவேனும் அறிவுவிளக்கத்தினைத் தருகின்ற ''மாயை'' யை சுட்டுவதற்கு "ஒண்தளை" என்ற சொல் பயன்பட்டது.

அசுத்தமாயா காரியங்கள் மாயேயம் எனப்படுகின்றன. இவை பெத்தநிலையில் உள்ள ஆன்மாக்களின் மல அழுக்கினைப் போக்குவதற்கு

குறித்த அளவில் உதவுகின்றன. அழுக்கியல்புடைய உவர்மண், தேற்றாங்கொட்டை முதலியவை துணியின் அழுக்கை வெளுப்பதற்கு துணை செய்வதுபோல இவை உதவுகின்றன.

பிரகிருதி மாயையிலிருந்து தோன்றும் பூதாதிகள் ஆன்மாக்களுக்கான வினைப்போக ஸ்தானமாகிய பௌதீகப் பிரபஞ்சத்தை சிருட்டிக்கின்றன.

இவ்வாறாக மாயாமல காரியங்கள் அனைத்தும் சூரியன் வரும்வரையில் சூழ்ந்துள்ள இருளை எதிர்கொள்ள உதவிடும் கைவிளக்குப்போல ஆன்மாக்களுக்கு ஒருவகையான பரிக்கிரக சக்தியாகத் துணை செய்கின்றன. இதனையே,

*"விடிவாமளவும் விளக்கனைய மாயை"*[9]

என்று திருவருட்பயனும்

*"மாயா தனுவிளக்காம் மற்றுள்ளம் காணாதேல்*
*ஆயாதாம் ஒன்றை"*[10]

என சிவஞானபோத வெண்பாவும் சுட்டின.

*"எளியாய் அரியாய் நிலம்நீரொடு தீ*
*வெளிமன்னிய தூ ஒளியாய்"*[11]

என்கிறார் சம்பந்தர்.

அல்லது அசித்துப்பொருள் ஆதலால் எளிமையாகவும் கட்புலனாகவல்ல எண்ணரிய சிருஷ்டிபேதங்களை தரக்கூடிய வல்லமை இருந்தாலும் தன்னியல்பிலே அருவமானதாக புலன்களால் அறியமுடியாமல் அரியதாக இருப்பதனால் அரியதாகவும் உள்ள மாயையானது உயிர்களின் பொருட்டு பஞ்சபூதங்களாலமைந்த பிரபஞ்ச இயற்கையை தந்துதவி ஒரு விளக்குப்போல ஒளிசெய்து உதவுவதையே இவ்வடிகளால் சம்பந்தர் குறித்துரைத்தார் எனக் கொள்ள இடமுண்டு.

இவ்வாறு, மாயை விடிவாமளவும் விளக்காகக் கருதப்படினும் அது ஆன்மாக்களுக்கேயுரித்தான பசுஞானத்தை தொழிற்படவிடாது தடுத்து பாச ஞானத்தில் லயித்திருக்க வைக்கிறது. ஆன்மாக்கள் தமது வினைப்போகத்தினை முறைப்படி அனுபவித்துக் கழிப்பதற்காகவே இச்செயன்முறை நிகழ்த்தப்படுகிறது.

*"மாயை மயக்கத்தை செய்யமன்றே"*[12]

என அருணந்திசிவாச்சாரியார் இதனையே சுட்டுவார்.

இத்தகைய மாயையின் குணாம்சத்தினைச் திரோதாயி எனப் பெண்ணாற்றலாக உருவகிப்பது சைவசித்தாந்த மரபாகும்.

அந்தவகையில் ஆணவம் ஆகிய நோயால் பீடிக்கப்பட்ட நோயாளி ஆன்மா எனின் அதற்கு வைத்தியன் முதல்வன், மருந்து கன்மம். ஏனெனில் வினைப்போகம் ஒழியாமல் விடுதலையில்லை. அவ்வாறாயின் அம்மருந்தாகிய கன்மத்தினைப் பக்குவமாக நோயாளியாகிய ஆன்மாவுக்கு ஊட்டுவிக்கவல்ல கனிவான தாதியாக, செவிலித்தாயாக திரோதாயி உருவகிக்கப்படுகிறது.

நோயாளியாகிய ஆன்மா மருந்தினை இச்சைப்பட்டு அருந்தும் வகையில்(அனுபவிக்கும் வகையில்) கவர்ச்சியாகவும், சுவையாகவும் காட்சிப்படுத்தவல்ல மருந்தூட்டுகின்ற சாதனங்களாக மாயாமல காரியங்கள் விளங்குகின்றன. இதனையே,

*"மாயை கைத்தாயாக, மாமாயை ஈன்றிட"* [13]

எனத் திருமூலரும்,

*"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை"*[14]

என மணிவாசகரும், குறிப்பிடுவர். இதனைத் திருஞானசம்பந்தர்,

*"தாதியாயிருப்பர் இவர் தன்மையாரறிவார்*[5]
*இச்சையாயிருப்பர் இவர் தன்மையாரறிவர்"*[6]

எனக் சுட்டுவது கவனிக்கத்தக்கது.

## பதி சம்பந்தம்

தனு, கரண, புவன, போகங்களைத் தோற்றுவிக்கும் செயன்முறையில் பதிப்பொருளுக்கு மாயையின் துணை மிகமிக இன்றியமையாதது.

*"மாயைதான் அசித்துருவாய் மருவமாட்டா*
*அன்னவனும் இது ஒழிய ஆக்கமாட்டான்"*[17]

எனச் சிவப்பிரகாசமும் குறிப்பிடும். இதனையே மாயைக்கு இலக்கணம் கூறவந்த சிவஞானசித்தியாரும், *'நித்தமாய் அருவாய்'* என்ற செய்யுளில்

*"விமலனுக்கோர் சக்தியாய்.........."*[18]

என்று பகர்கிறது. இதனையே திருஞானசம்பந்தரும்,

*"எங்குமாகி நின்றானும் இயல்பறியப்படா*
*மங்கை பாகங் கொண்டானும்"*[19]

எனக் குறிப்பிடுவார். இயல்பறியப்படா மங்கை என்பது.அருவாய், விமலனுக்கோர் சக்தியாய் நின்ற மாயையைக் குறிக்கிறது.

பதியினைப் பொறுத்தவரையில் மாயையால் விளையும் போக போக்கியங்களால் எந்தப்பயனும் பெறுவதற்கில்லை. தனக்கு எவ்வித பயனும் இன்றி உயிர்களின் பொருட்டுப் போகபோக்கியங்கள் தோற்றுவிக்கப்பட பதி நிமித்தகாரணமாக உள்ளது. இதனையே.திருஞானசம்பந்தர்,

*"தான் நல்ல போகத்தன் நல்ல*
*யோகத்தையே புரிந்தானே"*[20]

என்ற அடிகளில் உணர்த்தியுள்ளார்.

## நிறைவாகச் சில ஊகங்கள்

மண்ணின் நல்ல வண்ணம் வாழலாம் என்பதையும் அதன்வழியே பதியின் திருவடிநிழலைச் சேரலாம் என்பதனையும் எப்பொழுதும் வலியுறுத்தத்தவறாத திருஞானசம்பந்தர், அவ்வண்ணம் வாழ வகைசெய்த பிரபஞ்ச இயற்கை தொடர்பான தத்துவார்த்த விடயங்களைப் பேசுகின்ற பொழுதெல்லாம் சைவசித்தாந்தம் பிரபஞ்ச இயற்கை தொடர்பாக மாயைக்கு கொடுத்திருந்த சிறப்புரிமைகளை வெளிப்படையாகப் பேசாமல் இறைவன்மேல் ஏற்றியே பேசியிருக்கிறார்.

தனது பதிகங்களில் ஆணவம், வினை, பசு, நாற்பாதங்கள், பதியின் தடத்த, சொரூபநிலைகள், சக்திதத்துவம் முதலிய சைவசித்தாந்த எண்ணக்கருக்களை நேரடியாகவே பதிவுசெய்துள்ள திருஞானசம்பந்தர் மாயை தொடர்பான சங்கதிகளை இறைவனோடு தொடர்புபடுத்திப் பூடகமாகப் பதிவு செய்திருப்பதாகவே எண்ணத்தோண்றுகிறது.

இதற்கான பின்னணி யாதெனச் சிந்திக்க முற்படலாம். சமகாலத்தில் தமிழ்நாட்டில் நிலவிய பௌத்த, சமண சமயங்கள் பிரபஞ்சக் கட்டுருவாக்கம், உலகவாழ்வு தொடர்பாகத் தர்க்கரீதியானதும் சிக்கலானதுமான தத்துவக் கோட்பாடுகளை முன்வைத்தன. கணபங்கவாதம், அணுவாதம், பரிகாயவாதம், அனேகாந்தவாதம், நியதிவாதம் போன்றன இதற்குச் சில எடுத்துக்காட்டுக்கள் ஆகும்.

இவ்வாதங்கள் அனைத்தும் உலகியற்கையினை இறைவனோடு தொடர்புபடுத்தாமல் சடத்தன்மையுடையதாக இறைவனுடைய ஆணைக்கு உட்படாதவையாகவே காட்சிப்படுத்துகின்றன. துன்பம் நிறைந்ததும், சதா மாற்றத்திற்கு இயல்பானதுமான உலகியற்கையே இக்கோட்பாடுகள் பலவற்றின் பொதுத் தன்மையாகவுள்ளது.

சம்பந்தர் இதற்கு நேர் விரோதமான கருத்தியலை முன்வைத்தவராவார். உலகை இறைவனின் அருள்சுரக்கும் இடமாக உயிர்வாழ்க்கைக்குப் பயன்பாடு கொண்ட மகிழ்ச்சி நிறைந்த ரம்மியஸ்தானமாகச் சித்திரிக்க

வேண்டியது அவரைப் பொறுத்த வரையில் காலத்தின் கட்டாயமாக இருந்தது. இதுவே சைவ பக்தி இயக்கத்தின் அரசியலாகவும் இருந்தது. எனவே, பிரபஞ்ச இயற்கையை முற்றுமுழுதாகப் பௌதீக இயல்புடையதாக ஏற்றுக்கொள்வதற்கு சம்பந்தர் விரும்பவில்லை. இதனை,

*"சடங்கொண்ட சாத்திரத்தார்*
*சாக்கியர் சமணர்குண்டர்"*[21]

என்ற அவருடையவாக்கே எமக்கு உணர்த்தி நிற்கிறது.

அதேவேளை சடச்சார்புடைய பௌதிக உலகினை முற்றுமுழுதாக இறைச்சார்புடையதாகப் பேசுவதில் உள்ள தத்துவ நெருக்கடியையும் சம்பந்தர் நன்கு உணர்ந்திருந்தார். ஏனெனில் சமய வாழ்வியலுக்கு அப்பால் சம்பந்தர் காலூன்றி நின்ற தத்துவத்தளம் சைவசித்தாந்தமேயாகும். பிரபஞ்ச இயற்கை பற்றிய நிலைப்பாட்டில் சைவசித்தாந்தம் இறைவனை நேரடியாகத் தொடர்புபடுத்தாமல் மாயையை முன்னிலைப்படுத்தியுள்ளது.

மாயை குறித்த சைவசித்தாந்த விளக்கங்கள் குறித்தளவில் சடச்சார்புடையவை. அதேவேளை சிக்கலானவை. மேலும் மாயை பற்றிய இக் கருத்துரைகள் ஏற்கனவே தமிழகத்தில் அவைதிக மதங்களால் விதைக்கப்பட்டிருந்த உலக நிலையாமை பற்றிய விம்பத்துக்குள் அமுங்கிப் போய்விடலாம் என்ற அச்சமும் சம்பந்தருக்கிருந்தது.

*"குணமறிவுகள் நிலையில பொருளுரை மருவிய*
*பொருள்களுமில திண்ணம் எனுமிவர்"*[22]

என்ற சம்பந்தரின் தேவாரஅடிகளில் உலகநிலையாமை குறித்த பௌத்த, சமண சமயங்களின் கொள்கைகளில் சம்பந்தருக்கிருந்த வெறுப்பு நன்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகையதோர் மும்முனை நெருக்கடியினை லாவகமாகக் கையாண்டதன் வெற்றியே மாயை பற்றிய சம்பந்தர் பதிகங்களில் இழையோடியுள்ள இடக்கரடக்கலான சொல்லாடல்களாகும்.

*"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்கச் சோதி*[23] ப்பதில்

நாட்டமற்றவர் போல் உலகத்தவர்க்கு எளிமையான, மகிழ்ச்சியான நடைமுறைச் சமயவாழ்வைப் போதிப்பவராகச் சம்பந்தர் தன்னை இனங்காட்டிக் கொண்டார்.

ஆனால், எந்தச் சந்தர்ப்பத்திலும் புத்திஜீவிகள் மத்தியில் நடக்கும் தத்துவப் போர்களில் சைவம் தோற்றுப்போய் பிறசமயத்தவரிடம் சரணடைந்துவிடக்கூடாது என்பதிலும் அவர் மிகமிக விழிப்பாகவே இருந்தார்.

## அடிக்குறிப்புக்கள்

1) திருமுதுகுன்றத்திருப்பதிகம் 1.3.
2) சிவப்பிரகாசம் பா.23.
3) சிவஞானசித்தியார், சுபக்கம்இ34.
4) திருவீழிமிழலை 3.6
5) திருப்புறம்பயத்திருப்பதிகம் 2.3.
6) சிவப்பிரகாசம் பா.47.
7) திருவீழிமிழலைத் திருப்பதிகம் 1.4
8) திருநெல்வாயில், 2.7
9) திருவருட்பயன், 30
10) சிவஞான போத சூத்திரம், 4.அதிகரணம் 2, பா.27
11) திருக்கழிப்பாலை 2.4
12) சிவஞான சித்தியார், சுபக்கம்,பா.143
13) திருமந்திரம், 2268
14) திருவெம்பாவை,பா
15) பல்லவனேசுவரப்பதிகம் 3.8
16) மேலது 3.6
17) சிவப்பிரகாசம்.பா.23.
18) சி.சித்தியார், சுபக்கம்,பா.143

19) திருவையாற்றுத் திருப்பதிகம்

20) திருநல்லூர்ப்பெருமணம்.3.7

21) திருப்பருப்பதம். 1.10.

22) திருச்சிவபுரம் 1.10

23) திருப்பாசுரம் 3.5

*இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்ட திருஞானசம்பந்தர் தேவாரஅடிகள் **திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்(தலமுறை)**, திருப்பனந்தாள் காசித்திருமடம். வெளியீடு. 2008 என்ற நூலை அடிப்படையாகக் கொண்டது.